DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 60/2025**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு. காளிமுத்து | கிராமம் : | |
| தந்தைபெயர் : | முத்துசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026

எதிரி ஆஜர் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தாந்தோனிமலையில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 30.04.2022 அன்று மாயனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி 30.04.2022 அன்று ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 10.11.2021ம் தேதி மாயனூர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது கரூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று சிகிச்சையில் இருந்த ரம்யா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றும் நிலைய மனு எண். 301/2021 வழங்கியும் விசாரணைக்குப்பின்பு நிலையக்குற்ற எண.632/2021 இதச பிரிவுகள் 294(பி),323, மற்றும் 4 of TNPHW Act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னிட்டு 30.11.2021 காலை 010.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பழனியப்பன், சண்முகம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் **பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் ரம்யா, பானுமதி, தமிழரசன், முருகன் பழனியப்பன், சண்முகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்னர் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த கரூர் GH மருத்துவர் குணசீலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துப்பதிவேடு, மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் வழக்கின் எதிரி கரூா அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்ற விவரம் தெரியவந்தது.

3. அ.ச.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் குணசீலன் என்பவர் கொடுத்த அறிக்கையின் படி அ.சா.1 க்கு கொடுங்காயம் என்பதால் இதச பிரிவுகள் 294(பி),323, மற்றும் 4 of TNPHW Act இதிலிருந்து இதச பிரிவுகள் 294(பி), 325, மற்றும் 4 of TNPHW Act சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணை முடித்து 23.07.2022 அன்று இதச பிரிவுகள் 294(பி), 325, மற்றும் 4 of TNPHW Act ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யவில்லைஎன்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரைப்பெற்று முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகளை நான் விசாரிக்கவில்லைஎன்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்று சொன்ன நேரத்தில சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் பார்க்கவும் இல்லை விசாரிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.29 11:17:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.